

திருவள்ளூர் அடுத்த ஐ.சி.எம்.ஆர். திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) மண்டல மாநாடு பயிற்சி பாசறை கூட்டத்திற்கான முன் ஏற்பாடு பணிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி உள்பட மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய கழக செயலாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் சென்னை அப்போலோ ப்ரோடான் புற்றுநோய் மையம் இணைந்து தயாரித்த, மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு சுவரொட்டியினை நேற்று (26.10.2023) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, அப்பல்லோ குழு புற்றுநோயியல் இயக்குநர் ஹர்ஷத் ரெட்டி, மருத்துவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் நிகழ்ச்சி ஏற்பாடு!

# திருவொற்றியூர் மத்தியப் பகுதி பாக முகவர் - பணிக்குழு ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் ஆர். காந்தி சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - சி.தசரதன் பங்கேற்பு!

சென்னை, அக். 27-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்தியபகுதி சார்பில், பாகம் 1 முதல் 44 வரை உள்ள பாக முகவர்கள், பி.எல்.ஏ-2, பி.எல்.சி, தேர்தல்பணிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 29.10.2023, ஞாயிற்றுக்கிழமை, காலை 10.30 மணியளவில், திருவள்ளுவர் திருமண மண்டபம், சன்னதி தெரு, மணலியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளரும் 2வது மண்டலக் குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் எம்.சி, ஏற்பாடு செய்து வரவேற்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமை வகிக்கிறார்.

சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் ஆர்.காந்தி, கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., பகுதிப் பொறுப்பாளர்சி.தசரதன், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் பேசுகின்றனர்.

வ.முத்துசாமி, சாலை. டி.கணேசன், மு.செல்வம், டி.கரிகாலச்சோழன், ஆர். டி.ரமேஷ்குமார், வி.ஜி. தினகரன், துர்கா கோதண்டம், எஸ்.ஸ்டாலின், என். கிருஷ்ணமூர்த்தி, பா.செல்வராஜ், என்.விஜயரங்கன், எ.ஞானமூர்த்தி எஸ்.ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் எஸ். நந்தகோபால், வை.மா. அருள்தாசன், மிசா.பா. மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், அறிவழகி, எம்.ஆனந்தன், என். பரந்தாமன், ஜெ.ஜெ. ஜெய்மதன், டி.ஏ. ராஜீ, இரா.முருகேசன், பி. சாந்தி, புழல்.எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி. தயாளன், மி.வே.கருணாகரன், பெ.சரவணன், ஜி. ராஜேந்திரன், ஆர். சி.ஆசைதம்பி, எம்.வி. குமார், ந.திருசங்கு, ஆர். எஸ்.சம்பத், கே.பிரபாவதி, இரா.குமரேசன், எஸ்.பாஸ்கரன், ஒய். பரந்தாமன், ஆர். நரேந்திரகுமார், ஆர்.டில்லி, டி.டி. எம்.பாபு வி.பழனிவேல், ஏ.அப்துல் சலீம், கே.கார்த்திகேயன், எம்.ஜெயராமன், எம்.எத்திராஜ், பி. எஸ்.சைலஸ், பி.சந்தானகிருஷ்ணன், என்.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ்.குறலரசன், அ.இந்துமதி, எம். வஜ்சிரவேல், தினேஷ் குமார், எம். சந்திரகுமார், எஸ்.ஆர். மலைராஜ், வீ.வீரமுத்து, இ.வி. சரவணன், ஆர். மோகனசுந்தரம், பொன்கோ.விஜயன், எஸ்.மகேந்திரன், ஜி. தினேஷ், எஸ்.கணேஷ், எம்.பிரேம்குமார், ஆறுமுகம், பி.கனிமொழி, டி. கார்த்திகேயன், ஜி.துரைசாமி, இ.ஏழுமலை, எம். குணசுந்தரி, பி.ஆஸ்னா மெரிசியா, எஸ்.நந்தினி, கே.காசிநாதன், உதயா ராஜேந்திரன், மு.சிவக்குமார், பி.தம்பையா, கே.பி.சொக்கலிங்கம், டி. சி.வி.விஜயகுமாரி, உமாசரவணன், சரண்யா கலைவாணன், கவி கணேசன், சுசீலா ராஜா, பானுமதி சந்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

திருவொற்றியூர் மத்திய பகுதி பொருளாளர் எம். எஸ். நாகலிங்கம் நன்றி கூறுகிறார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! கூ.பீ.ஜெயின் தலைமை! கலைஞர் நூற்றாண்டு விழா!

# வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் தொடர் 3 நாட்கள் மாபெரும் மருத்துவ முகாம்!

### அமைச்சர் மா.மதிவேந்தன் துவக்கி வைக்கிறார்! தயாநிதிமாறன் - அ.வெற்றி அழகன் பங்கேற்பு!

சென்னை, அக். 27

சென்னை கிழக்கு மாவட்டம்,வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "உடல் குணமாகட்டும்! உயிர் நலமாகட்டும்! " வில்லிவாக்கம் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாம்கள் 27.10.20223, 28.10.2023, 29.10.2023 வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமை ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து மாபெரும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

முதல் நாள் மருத்துவ முகாம் இன்று (27.10.2023 வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில், வில்லிவாக்கம், எம்.டி.எச்.சாலையில் அமைந்துள்ள டி.கே.ஏ.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைக்கிறார்.

மத்தியசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச்செல்வி, ஐ.சி. எப்.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, ஜெ.தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.கோபாலகிருஷ்ணன், மா.கபிலன், கோ. மணிவேந்தன், பா.தே.தீனதயாளன்,

கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே.பி.தீபக்குமார்,ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ பி. சுரேஷ்பாபு,பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேர்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு தலைவரும், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளரும், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் வே.கௌதமன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சங்கரிநாராயணன், எஸ். மணிமூடி, கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், என்.வி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த, சி.மகேஷ்குமார், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகா தேவன், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத் மற்றும் பகுதிக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன். வட்டச் செயலாளர் ஆர்.தீனதயாளன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின் அறிக்கை விடுத்துள்ளார்.

### ஆவடி தொகுதியில் 74 லட்ச ரூபாய் மதிப்பில்

# பள்ளிக் கட்டிடம் மற்றும் பூங்கா அமைக்கும் பணிகள்!

### மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் அக் 27;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் 3ற்குட்பட்ட 33வது வார்டு சக்தி கனோப்ளாஸ் பகுதி பூங்காவில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் நிதியின் கீழ் 39.90 லட்சம் மதிப்பீட்டில் ஆள்துணை கிணறு அமைத்தல், நடைபாதை விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் புல் தரை அமைத்தல் பணிகளுக்கான அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு அதன் பணிகள் துவக்க விழா நடைபெற்றது.. இதனை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டு திட்டப்பணிகளை துவக்கி வைத்து பூங்காவில் உள்ள பராமரிப்பின்றி கிடந்த உபகரணங்கள், கழிவறைகள், நடைபாதைகள், மின் கோபுரவிளக்குகள் என அடிப்படை வசதிகளை சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

முன்னதாக சக்தி கனோப்லாஸ் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கயை ஏற்று நிறுத்தப்பட்டிருந்த பேருந்து வசதியை மீண்டும் துவக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவில் நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தார்

இதனை தொடர்ந்து ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்து தர தலைமை ஆசிரியர் கோரிக்கை வைத்த நிலையில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 34 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 22மற்றும் 24 ஆகிய வார்டுகளில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் இரண்டு கூடுதல் வகுப்பறைகளை கட்டிமுடிக்கப்பட்ட அதன் திறப்பு விழாவும் நடைபெற்றது இதில் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ திறந்து வைத்து பள்ளிப் மாணவர்களுக்கு இனிப்பு வழங்கினார் திருநின்றவூர் நகராட்சி வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகராட்சி மன்ற கட்டிடத்தை பார்வையிட்டார்

இதில் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், ஆவடி மாநகர ஆணையர் ஷேக் அப்துல்ரகுமான் மண்டல குழு தலைவர் ஜி. ராஜேந்திரன், நகர மன்றத் தலைவர் உஷாராணி ரவி, ஆணையர் சுரேந்தர் ஷா தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், நகர மன்ற துணை தலைவர் சரளா நாகராஜ், மாநகர பொறுப்பாளர் சண்பிரகஷ், திருநின்றவூர் நகர கழக நிர்வாகிகள் அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், நாகராஜ், ரவி,பாபு நகர மன்ற உறுப்பினர்கள் சசிகலா ஜீவானந்தம், தங்கராஜ், தி.வி.சுரேஷ்குமார், பி.எல்.ஆர்.யோகா, எம். கிருஷ்ணன், ஜெயக்குமார், வார்டு செயலாளர்கள் ஜீவானந்தம் அசோக்குமார், சலீம், மாதவன், பாபு மற்றும் பிரவீன் குமார், தங்கமணி, பி.டி.சி. மணி, மகேஷ்குமார், சுதர்சனம், பிரசன்னா, உதயநிதி, சேகர், சுபாஷ், பட்டாணி கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம் இன்று 27-10-2023 வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் சைதை பஜார் சாலையில் அமைந்துள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளின் 'தொகுதி பொறுப்பாளர்கள்', மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்...

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**

செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் சிறுதாமூர் ஊராட்சி பட்டா கிராமத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்,ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, அதனை தொடர்ந்து நீண்ட காலம் மக்கள் கோரிக்கையான அருங்குன்றம் மற்றும் பொற்பந்தல் தார்சாலை அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார். இதில் சாலவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் தி.குமார், அரசு ஒப்பந்ததாரர் செந்தில்குமார், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.ஆர்.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ஜி.சிவராமன், ஒன்றிய குழு உறுப்பினர் பெ.சுப்பிரமணி, சிறுதாமூர் ஊராட்சி மன்ற தலைவர் கோதண்டராமன், பொற்பந்தல் ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திகேயன், ஒன்றிய அவைத் தலைவர் என்.எஸ்.ரவி, ஒன்றிய பொருளாளர் பாலமுருகன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி துணை அமைப்பாளர் சு.முரளிதரன், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் செ.விஷ்ணு, பாலேஸவரம் ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரமூர்த்தி, மற்றும் ஒன்றிய , மாவட்ட, கிளை, கழக நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அரசு துறையை சேர்ந்த நிர்வாகிகள் ஊர் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு

# பணி உயர்வு வழங்கிய முதல்வருக்கு நன்றி!

### தமிழ்நாடு பொது நூலகத் துறை அலுவலகச் சங்க நிறுவனத் தலைவர் எம்.ஜி. செல்வம் அறிக்கை!

சென்னை, அக். 26 -

44 ஊர்புற நூலகர்களுக்கு பணி உயர்வு வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி என்று தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் சங்க நிறுவனத் தலைவர் எம்.ஜி. செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறும் காலங்கள், நூலகத்துறையின் வளர்ச்சிக்கும், நூலகர்களின் நல்வாழ்விற்கும் பொற்காலம் என்றால் மிகையாகாது.

உலகத்தரம் வாய்ந்த உன்னத நூலகத்தை ""அண்ணா நூற்றாண்டு நூலகம்"" எனும் பெயரில், சென்னை தலைநகரில் உருவாக்கிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உண்டு.

உலக அளவிலான நூலகங்களுக்கு ஈடான வகையில் ""கலைஞர் நூற்றாண்டு நூலகம்"" என்ற பெயரோடு நவீன நூலகத்தை, சங்கம் வளர்த்த மதுரையில் உருவாக்கி, தமிழ்நாட்டின் பெருமையை உலகறியச் செய்தவர் திராவிட மாடல் ஆட்சி செய்யும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஊர்ப்புற நூலகர்கள் ஆயிரத்து ஐநூறு ரூபாய் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்தனர். அவர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கி ஊர்ப்புற நூலகர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார்.

கடந்த பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில், ஊர்ப்புற நூலகர்களுக்கு, காலமுறை ஊதியம் வழங்கவில்லை. பணி உயர்வும் அளிக்கவில்லை. இந்நிலையில் இப்போது கழக ஆட்சியில் நானூற்று நாற்பத்தாறு ஊர்ப்புற நூலகர்களுக்கு, மூன்றாம் நிலை நூலகர்களாக பணி உயர்வு வழங்கி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பொது நூலகத்துறை இயக்குநர் இளம்பகவத் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோன்று பொது நூலகத்துறையில் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் ஊர்ப்புற நூலகர்களுக்கு காலமுறை ஊதியம் விரைந்து வழங்கிடுமாறு முதல்வர் அவர்களை தமிழ்நாடு பொது நூலகத்துறை அலுவலர் சங்கம் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு எம்.ஜி.செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஏ.எல். சுப்பிரமணியன்

### அக்டோபர் 27 (2012)



பேரறிஞர் அண்ணா அவர்களின் காலந்தொட்டு, மாணவப் பருவத்தில் இருந்தே தனது வாழ்க்கையை கழகப் பணிகளுக்காகவே ஒப்படைத்து அண்ணாவின் இதயத்தில் இடம் பிடித்தவர்.

தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் – கழக சட்டத்துறைச் செயலாளர் ஆகிய கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு மூன்று முறை வென்று, சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெல்லை மாநகராட்சியின் முதல்மேயராக பொறுப்பேற்று 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை சிறப்பாகப் பணியாற்றியவர்.

"நெல்லைச் சீமையே தனது அன்பு உடன்பிறப்புக்களில் ஒருவரை இழந்து நெஞ்சம் கலங்கி நிற்கிறது. யாருக்கு நான் எப்படி ஆறுதல் கூறுவேன்? எனக்கு நானே ஆறுதல் கூறிக் கொள்கிறேன்" என தலைவர் கலைஞர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**